இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1434 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

பதவிகள் - வெற்றிடம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் மேற்படி வர்த்தமானியில் பார்க்கவும்

பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி -கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவினுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின், மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2006, பங்குனி மாதம் 24 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2006.02.02

அட்டவணை

மாவட்டம்	பிரதேச செயலாளர் பிரிவு	விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்	விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி
1. கொழும்பு	கெஸ்பேவ	சல்பிட்டி கோறளைப் பிரிவின் கெஸ்பேவ பிரதேச மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.
2. கொழும்பு	கொழும்பு	கொழும்பு கொம்பனித்தெரு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.
3. கொழும்பு	கொழும்பு	மோதரை பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.
4. கொழும்பு	ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டை	கொழும்புப் பிரிவின் கோட்டை தெற்கு பிரதேச விவாக (பொது) பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.
5. கொழும்பு	கொழும்பு	அலுத்கடை பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.
6. கொழும்பு	திம்பிரிகஸ்யாய	பொரளை பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.
7. கொழும்பு	திம்பிரிகஸ்யாய	கொள்ளுப்பிட்டி பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.
8. கொழும்பு	ஹோமாகம	ஹோவாகம் கோறளைப் பிரிவின் விவாக (பொது) மற்றும் அதுருகிரிய பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.
9. கொழும்பு	மஹரகம	மஹரகம் பிரிவின் கலல்கொட/பன்னிபிட்டி பிரதேச மேலதிக விவாக பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.
10. கொழும்பு	பாதுக்க	வக பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹேறவாகம் கோறளைப் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.
11. கொழும்பு	கொழும்பு	கொழும்பு (தெற்கு மோதரை) பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.
12. கொழும்பு	திம்பிரிகஸ்யாய	கொழும்பு பொது வைத்தியசாலை பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.
13. கொழும்பு	கெஸ்பேவ	கெஸ்பேவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் சல்பிட்டி கோறளைப் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.
14. கொழும்பு	கொலன்னாவை	கொலன்னாவை நகர பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி	மாவட்ட செயலகம்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு.

2-733

பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றன:-

2. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக பதிவு செய்கின்ற பிரிவினுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்களுக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின், மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2006, பங்குனி 24 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2006.02.02

அட்டவணை

மாவட்டம்	பிரதேச செயலாளர் பிரிவு	விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்	விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி
கொழும்பு	கொழும்பு	கொழும்பு பிரிவினைக் (மருதானை) முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி	மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், கொழும்பு.

2-734

நீர்ப்பாசன அமைச்சு
நீர்ப்பாசனத் திணைக்களம்

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பொறியியல் உதவியாளர் பதவி

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இலங்கை பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பொறியியல் உதவியாளர் பதவிகளை நிரப்புவதற்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் "நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம், இல. 230, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7" என்ற முகவரிக்கு 2006.03.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பொறியியல் உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதி அனுப்புதல் வேண்டும்.

இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, மார்ச்சு 03 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, பெப்புருவரி 17 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அமுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 06 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அமுத்தகரினால் பிரசுரிக்கப்பட்டது.

2. **சம்பள அளவுத்திட்டம்**.- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த பின்னர் வருடாந்த திரட்டிய சம்பளம் ரூபா 1,05,840 - 7 x 1,320 - 10 x 1,560 - ரூபா 1,30,680 (இது வருடாந்த சம்பள நிலை ரூபா 1,13,760 க்கு முன்னர் வினைத்திறமை காண் பரீட்சையை உள்ளடக்கியுள்ளது)

3. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசையாயிருத்தல்.

(ஆ) 2006.03.31 ஆந் திகதியன்று 45 வயதுக்கு மேற்படாமலும் 18 வயதுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். (மாகாண அரச சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லையானது ஏற்புடையதன்று)

(இ) நன்னடத்தை உடையவராயிருத்தல்.

(ஈ) பரீட்சார்த்தி நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்யக்கூடிய உடல் தேகாரோக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும். எனவே தேகாரோக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கென அரசாங்க மருத்துவ உத்தியோகத்தரினால் நடாத்தப்படும் மருத்துவ பரிசோதனைக்குட்படல் வேண்டும்.

(உ) பரீட்சார்த்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள I அல்லது II இல் ஏதாவது ஒரு கல்வித் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(I) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு தமிழ், கணிதம், ஆங்கிலமொழி, விஞ்ஞானம் ஆகிய பாடங்களிலும் வேறு ஏதாவது ஒரு பாடத்திலும் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் பௌதீகவியல், தூயகணிதம் உட்பட நான்கு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

புதிய பாடத்திற்கிணங்க க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் இணைந்தகணிதம், பௌதீகவியல் உள்ளடங்கலாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(II) கட்டுபத்த பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாச் சான்றிதழ் (குடிசார் பொறியியல்) அத்துடன் உரிய துறையில் ஒரு வருட பிரயோகப் பரீட்சையைப் பூர்த்தி செய்ததுடன் அளவையியல், மட்டமிடல், நீர்ப்பாசனப் பொறியியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்தமைக்கான உரிய சான்றிதழ்கள்.

குறிப்பு.- பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளமுடியாதவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்போது அதே சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. **ஆட்சேர்க்கப்படும் முறை**.- (அ) ஆட்சேர்ப்பானது பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 15/ 90 இற்கிணங்கவும் தாபன விதிக்கோவைக்கிணங்கவும் மேற்கொள்ளப்படும்.

(ஆ) (i) பயிலுனர்கள் பிரிவு 3 உ (1) இன்கீழ் தகைமைகளுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கல்கமுவ திணைக்கள பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் இரண்டு வருட கால முழு நேர வதிவிடப் பயிற்சி வழங்கப்படும். குறித்த பரீட்சையில் இறுதிப் பரீட்சை உள்ளடங்கலாக குறிப்பிட்ட பரீட்சையில் சித்தியடைந்த பயலுனர்கள் பிரயோகப் பயிற்சிக்காக ஒரு வருடம் வெளிக்களத்துக்குச் சேரக்கப்படுவர். நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் அவர்களின் திருப்திக்கேற்றவாறு வெளிக்கள பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த பின்னர் ஒரு பிரயோகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதில் சித்தியடைந்தவர்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் நீர்ப்பாசனப் பொறியியலாளர் சான்றிதழைப் பெறும் உரித்துடையவராவர்.

(ii) நீர்ப்பாசனப் பயிலுநர்கள் குறிப்பிட்ட பரீட்சையில் சித்தியடையத் தவறின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானத்தின்படி பயிற்சி நெறியை ஆறு மாத காலத்துக்கு மேற்படாதவாறு பயிற்சிக் காலத்தை நீடித்துப் பயிற்சி நெறியைத் தொடர அனுமதிக்கப்படுவர். இச்சித்தியின்மைக்குக் காரணமாக கடமையில் அலட் சியம், ஆர்வமின்மை, வரவில் பலவீனம் போன்றவை யாக இருக்கக்கூடாது. சித்தியடையத் தவறிய பயிலுனர்கள் இறுதிப் பரீட்சையுட்பட அனைத்துப் பரீட்சைகளிலும் சித்தியடைதல் வேண்டும். இப்பரீட்சையானது பயிற்சி நெறி நீடிப்புக் காலம் முடிவடைந்ததும் இடம்பெறும். இப்பரீட்சையிலும் இவர்கள் சித்தியடையத் தவறின் அவர்களது சேவை முடிவு பெறும்.

(iii) பயிற்சிக் காலத்தின்போது கருத்தரங்குகளுக்கு அல்லது உரைகளுக்கு பயிலுனர்கள் 80% குறைந்தபட்சம் வருகை தந்து பயிற்சி நெறியில் திருப்திகரமான பதிவை ஏற்படுத்துவது விரும்பத்தக்கது. பயிலுனர்கள் தேவைப்படும் குறைந்த பட்ச வரவுகளையும் பயிற்சி நெறியில் திருப்திகரமான பதிவையும்கொண்டிராதவர்கள் குறித்த பரீட்சையில் அமர்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. அவ்வாறே பயிற்சி நெறியும் முடிவுறுத்தப்படும்.

(iv) பிரிவு 3 உ (11) கல்வித் தகைமைகளுக்கமைய ஆட்சேர்க்கப்படும் பயிலுனர்கள் (06) ஆறு மாத கால பயிற்சி நெறியின் முடிவில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வேண்டப்படும் பிரயோகப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இப்பயிற்சி நெறியானது பிரசங்கங்களையும் அல்லது உரைகளையும் பிரயோகப் பயிற்சியையும் கொண்டதாகும்.

(v) பயிலுனர்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வெளிக்களப் பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யின் ஆட்சேர்ப்புக்குப் பின் வேண்டப்படும் ஆறு மாத கால பயிற்சி நெறி விலக்களிக்கப்படும். அத்தோடு அவர்கள் அனைத்து பிரயோகப் பரீட்சையிலும் சித்தியடைதல் அவசியமாகும்.

(இ) அனைத்து பிரசங்கங்களும் அல்லது உரைகளும் பயிற்சி நெறிகளும் ஆங்கில மொழியிலேயே நடாத்தப்படும்.

(ஈ) பயிற்சி நெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தவர்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு நியமிக்கப்படுவர்.

5. **சேவை நிபந்தனைகள்**.- (அ) இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பங்களிப்பு ஓய்வூதிய சம்பள நிதிக்குக் கொடுப்பனவு செலுத்தப்படல் வேண்டும். தற்போது ஓய்வூதியப் பதவிகளில் உள்ளவர்கள் ஓய்வூதியம் பெற உரித்துடையவராவர்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் முதலில் நீர்ப்பாசனப் பயிலுனர்களாக ஆட்சேர்க்கப்படுவர்.

(இ) நீர்ப்பாசனப் பயிலுனர்களுக்குப் பயிற்சிக் காலத்தின்போது கொடுப்பனவு ஒன்று செலுத்தப்படும். பிரிவு 3 உ (11) கல்வித் தகைமைகளுக்கமைய ஆட்சேர்க்கப்படும் நீர்ப்பாசனம் பயிலுனர்கள் பயிற்சிக் காலம் முழுவதும் கீழ் காணப்படும் கொடுப்பனவைப் பெறுவர் :-

முதல் வருடத்தின் போது (மாதாந்தும்) - ரூபா 4,050
இரண்டாம் வருடத்தின்போது (மாதாந்தம்) - ரூபா 4,150
மூன்றாம் வருடத்தின்போது (மாதாந்தம்) - ரூபா 4,250

பிரிவு 3 (உ) (II) இன் கல்வித் தகைமைகளுக்கமைய ஆட்சேர்க்கப்படும் பயிலுனர்கள் அவர்களது ஆறுமாத கால பயிற்சி நெறியின் போது மாதாந்தம் ரூபா 4,250 கொடுப்பனவு செய்யப்படும். இக் கொடுப்பனவானது நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் நீடிக்கப்பட்ட பயிற்சி நெறிக் காலத்துக்கும் தொடர்ந்து வழங்கப்படுவதோடு ஏனைய சலுகைகளுக்கோ உரிமைகளுக்கோ உரித்துரிமை பெறமாட்டார்கள்.

(ஈ) நீர்ப்பாசனப் பயிலுனர்கள் அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் தாபன விதிக்கோவை மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளுக்கு உட்படல் வேண்டும். அவர்களுக்கு லீவு அல்லது புகையிரத அனுமதிப்பத்திரங்கள் என்பன பயிற்சிக் காலத்தின்போது உரித்துடையதாகாது.

(உ) பயிலுனர்கள் தமது பயிற்சிக் காலம் முடிந்த பின்னர் இவர்கள் பொறியியல் உதவியாளர் வகுப்பு II தரம் II இற்கு நியமிக்கப்படுவதுடன் அவர்களுக்கு ஆரம்ப நியமனத் திகதியிலிருந்து (03) மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் காலமாகக் கணிக்கப்படும்.

(ஊ) தாபன விதிக்கோவையின் பந்தி 11 இன் பிரிவு 10-12 வரையான ஏற்பாடுகள் இச்சேவைக்கு உரித்துடையதாகும்.

(ஏ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பொறியியல் உதவியாளராக 5 வருடங்கள் கட்டாய சேவை செய்வதற்கு உடன் படிக்கையொன்றில் கையொப்பமிடுமாறு வேண்டப்படுவர். உடன்படிக்கைக்கிணங்க அவ் உத்தியோகத்தர் கட்டாயக் கால சேவை நிறைவேற்றத் தவறின், அவர்/அவள் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தத் தொகையையும் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டும்.

6. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றுப்பத்திரங்களின் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(அ) பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழ் ;

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சைச் சான்றிதழ் ;

(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சைச் சான்றிதழ் ;

(ஈ) பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் ;

(உ) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ் 03.
(அதில் ஒன்று இறுதியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரின்மூலம் மற்றது நிரந்தர வதிவிடப் பிரதேச கிராம சேவை உத்தியோகத்தரிடமிருந்து பெறப்படல் வேண்டும்)

குறிப்பு.- மேற்குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின பிரதிகள் திருப்பியனுப்பப்படமாட்டாது.

7. மாகாண அல்லது அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

8. விண்ணப்பதாரர்கள் கொழும்பில் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சைக்கென தமது சொந்தச் செலவிலேயே சமுகமளித்தல் வேண்டும்.

9. தேவை ஏற்படுமிடத்து நாட்டின் எந்தப் பகுதியிலும் எந்நேரத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். குறிப்பாக தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் கீழ்வரும் நிலையங்களில் ஏதாவது ஒன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் சேவை செய்யுமாறு கேட்கப்படுவர். அவ்வாறு விருப்பமில்லாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய தேவையில்லை. நிலையங்களாவன நீர்ப்பாசன பிராந்திய அலுவலகங்களாவன அம்பாறை, பொத்துவில், கல்முனை, அக்கரைப்பற்று, அனுராதபுரம், பதவிய, இராஜாங்கனை, ஹுருளுவெவ, மாபாகட, பதுளை, கந்தேகெட்டிய, நவகிரி, ஊறுகாமம், திஸ்ஸ, வீரகெட்டிய, ஹம்பாந்தோட்டை, வெள்ளவாய, பிபிலை, மொனராகலை, பொலநறுவை, கௌதுள்ள, எலஹெர, இங்கினிமிட்டிய, புத்தளம், மூதூர், கந்தளாய், கோமரங்கடவளை, முரங்கன், வவுனியா மற்றும் திட்ட அலுவலகங்களுக்கும்.

10. விண்ணப்பத்தில் ஏதாவது பொய்த் தகவல்கள் கொடுக்கப்பட்டு ஆட்சேர்ப்புக்கு முன் தெரியவரின் பரீட்சார்த்தியுரிமையானது இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பின்னர் இவ்வாறான பொய்த் தகவல்கள் தெரியவரின் அவரது சேவை முற்றுப்பெறும்.

11. அரச பதவிகள் நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளை இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (IIஅ) வின் ஆரம்பத்தில் பார்க்கவும்.

(எந்திரி) பீ. எம். எஸ். சமரசேகர,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
இல. 230, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 7,
2006.02.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

நீர்ப்பாசன அமைச்சு

நீர்ப்பாசனத் திணைக்களம்

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பொறியியல் உதவியாளர் பதவி

1. (அ) முழுப் பெயர் :-----.
(ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
2. பால் :-----.
3. (அ) தபால் முகவரி :-----.
(ஆ) நிரந்தர முகவரி :-----.
4. வதிவிட மாவட்டம் :-----.
5. பிரதேச செயலாளர் பிரிவு :-----.
6. பிறந்த திகதி (பிறப்புச் சான்றிதழ் பிரதியொன்றை இணைக்கவும்) :-
(அ) ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.
(ஆ) பிறந்த இடம் :-----.
(இ) 2006.03.31 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.
7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
8. நீர் ஒரு இலங்கைப் பிரசையா (ஆம்/இல்லை) :-----.
இனம் :-

சிங்களவர்	
இலங்கைத் தமிழர்	
இந்தியத் தமிழர்	
முஸ்லிம்	
மலாயர்	
பறங்கியர்	
ஏனையோர்	

9. (1) கல்வித் தகைமைகள் (சான்றுப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்) :-
க. பொ. த. (சா. த.) பரீட்சை :-----.
முதல் அமர்வு :-----.
சுட்டெண் :-----. வருடம் :-----.

பாடங்கள்	தரம்
1.	.....
2.	.....
3.	.....
4.	.....
5.	.....
6.	.....
7.	.....
8.	.....

2 ஆம் அமர்வு
சுட்டெண் :-----. வருடம் :-----.

பாடங்கள்	தரம்
1.	.....
2.	.....
3.	.....
4.	.....
5.	.....
6.	.....
7.	.....
8.	.....

9. (2) க. பொ. த. (உ. த.) பரீட்சை :-----.
சுட்டெண் :-----. வருடம் :-----.

பாடங்கள்	தரம்
1. கணிதம்	.....
2. பௌதீகவியல்	.....
3.	.....
4.	.....

10. தொழில்நுட்பத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.
(தயவுசெய்து பயிற்சி நெறியின் பெயரையும் தொழில்நுட்பக் கல்லூரியின் பெயரையும் தருக)

11. நீர் அரச திணைக்களத்தில் அல்லது அரச கூட்டுத்தாபன மொன்றில் முன்னர் சேவையாற்றியிருப்பின் நீர் ஏன் இராஜினாமா/ சேவையை விட்டுவிலகல்/ சேவையைத் தொடராமை/சேவை நீக்கம் ஏற்பட்டதற்கான காரணத்தைக் குறிப்பிடவும் :-----.

12. தற்போது உத்தியோகத்தலிருப்பின் கீழ்வரும் விபரங்களைத் தருக :-
(அ) பதவி :-----.
(ஆ) நிறுவனம் :-----..
(இ) நியமனத் திகதி :-----.
(ஈ) தொழிலின் தன்மை :-----.

13. என்னால் மேலே கூறப்பட்டுள்ளவை யாவும் உண்மையானதும், சரியானதும் என உறுதி கூறுகின்றேன். மேலும் இவ்விண்ணப்பத்தில் பிழையான, தவறான தகவல்கள் ஏதும் உள்ளடக்கப்பட்டிருப்பின் அது தெரிவு செய்யப்படுவதற்கு தகைமையற்றதாகும் என நான் நன்கறிவேன். அத்தோடு அது ஆட்சேர்ப்புக்கு பின்னர் தெரியவரின் எந்தவித நஷ்டஈடுமின்றி உத்தியோகம் முடிவடைவதற்கு உரிய காரணமாக அமையும் என்பதையும் அறிவேன்.

.....
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

திணைக்களத் தலைவரின் விதப்புரை

(அரசாங்கத் திணைக்களங்களில், மாகாண சபையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

..... என்பவர் இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் தொழில்புரிகிறார், இவரது /இவளது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது எனவும், இதில் வேண்டப்பட்டுள்ள தேவைகளுக்கும் நிபந்தனை களுக்குமிணங்க இவர் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் எனவும் உறுதி கூறுகின்றேன். அவர்/அவள் தெரிவு செய்யப்படின் விடுவிக்க முடியும்/முடியாது எனவும் உறுதி கூறுகின்றேன்.

பெயர் :-----.
முகவரி :-----.
பதவி :-----.
திகதி :-----.
2-807

.....
திணைக்கள/நிறுவன/அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை)

பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா, அல்குர்ஆன் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2006
(பௌத்த தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குச் சமாந்தரமானது)

1. **ஒழுங்குவிதிகளும் பிரமாணங்களும்.**- மேற்படி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். 2006 இற்கான பரீட்சை 2006, மே மாதத்தில் நடாத்தப்படும். பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டங்களும் இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளன.

2. பரீட்சை நிலையங்கள்.- இணைப்பு 2 இல் கூறப்பட்டுள்ள நகரங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும்.

ஆயினும் ஏதாவதொரு பரீட்சை நிலையத்திற்குப் போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதபோது குறித்த பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அந்த நிலையத்திற்குரிய விண்ணப்பதாரிகள் அண்மையிலுள்ள வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றச் செய்யப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்களும் நகரங்களும் உள்ளடக்கிய பட்டியல் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **ஊடக மொழி.**- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். எனினும் ஒரு பரீட்சார்த்தி, தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் இவற்றுள் யாதேனும் ஒரு மொழி மூலம் மட்டுமே தோற்ற முடியும்.

4. **தகைமைகள்.**- இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இதன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனுமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

4.1 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில், பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் அல்லது 11 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களாயிருத்தல் ;

அல்லது

4.2 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட தர அல்குர்ஆன் மத்ரஸா பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்த மாணவராயிருத்தல் ;

அல்லது

4.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இஸ்லாம், அரபு ஆகிய பாடங்களில் சித்தியடைந்த மாணவர்கள்.

குறிப்பு.- 1. இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்ப தாரியும் மேலே 4 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளாரென அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபரி னால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

2. பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்குப் பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலை அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அல்லது பாடசாலை அதிபர் மூலமே விண்ணப்பிக்க முடியும்.

5. பதிவுசெய்யப்பட்ட சகல அஹதிய்யாப் பாடசாலைகள், மத்ரஸாக் கள் பாடசாலைகள் என்பவற்றிற்கு விண்ணப்பப் பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். விண்ணப்பப் பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் கிடைக்கப் பெறாத நிறுவனங்கள், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளல் வேண்டும்.

5.1 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவ தோடு, மற்றைய பிரதியினைக் குறுப்பிட்ட நிறுவனத்தில் கோவைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2006, மார்சு 17 ஆந் திகதி ஆகும்.

5.3 விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும், பிழைகளின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப் படாத விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும்.

5.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை
(விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப் பட மாட்டாது.)

5.5 விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இஸ்லாமிய சன்மார்க்க இறுதிச் சான்றிதழ் பரீட்சை-2006" எனவும், விண்ணப்பிக்கும் பரீட்சை நிலையமும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

5.6 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழையும் இணைத்து அனுப்பக்கூடாது. அஹதிய்யாப் பாடசாலையின் அல்லது மத்ரஸாவின் அதிபர் அல்லது பாடசாலை அதிபர் விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

6. பரீட்சைக்கட்டணம் ரூபா 60 ஆகும். முதன் முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

6.1 கட்டணம் செலுத்தும் முறை, உரிய தொகையை அஞ்சல கத்தில் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

7. **அனுமதி அட்டைகள்.**- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத் தினால் உரிய அஹதிய்யா அதிபர், மத்ரஸா அதிபர், பாடசாலை அதிபர் மூலமாக விநியோகிக்கப்படும்.

7.1 ஏதாவதொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் ஆரம்ப தினத்திலேயே பரீட்சை அனுமதி அட்டை பரீட்சை மேற்பார்வை யாளரிடம் ஒப்படைக்கத்தவறும் பட்சத்தில் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறித் தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலல்லாது வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக் குத் தோற்ற எத்தனிக்கும் பட்சத்தில் உரிய பரீட்சார்த்தியின் பரீட்சைக்குத் தோற்றும் தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையிலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அஹதிய்யாப் பாடசாலை அதிபர், மத்ரஸா அதிபர், பாடசாலை அதிபர், அரபுக்கல்லூரி அதிபர், வருட மொன்றிற்கு ரூபா 1,24,080 க்கு மேல் திரட்டிய வருடாந்த சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரச சேவை உத்தி யோகத்தர், மஸ்ஜிதுக்குப் பொறுப் பான இமாம் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டி ருக்க வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு (7) ஏழு தினங்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில், விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த, அஹதிய்யாப் பாடசாலை, குர்ஆன் மத்ரஸா பாடசாலை என்பவற்றின் அதிபர்கள் இது தொடர் பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களி லும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படுதல் வேண்டும் :

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) அஹதிய்யாப் பாடசாலை/குர்ஆன் மத்ரஸா/அரசாங்கப் பாடசாலையின் பெயர் ;
(இ) முழுப் பெயரும் விலாசமும் ;
(ஈ) விண்ணப்பித்த பரீட்சை நிலையம் ;
(உ) விண்ணப்பத்தை அனுப்பி வைத்த தபால் நிலையம் ;
(ஊ) பதிவு செய்த இலக்கமும் திகதியும்.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்.**- சகல பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்குக் கீழ்வரும் ஆவணங்களுள் ஒன்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் விநியோகிக் கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் பிரயாணக் கடவுச்சீட்டு (Passport) ;
(இ) அஞ்சலதிபர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட செல்லு படியாகும் அஞ்சல் அடையாள அட்டை.

9. **பரீட்சை முடிவுகளை வெளியிடலும், சித்திபெற்றமையைத் தீர்மானித்தலும் :**

9.1 இப்பரீட்சைக்குரிய பாடங்கள் நான்கு ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடையும் பரீட்சார்த்தி கள் மட்டுமே இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர் :

(அ) ஒவ்வொரு பாடத்திற்குமான மொத்தப்புள்ளிகள் 100 ஆகும்.

(ஆ)	00 - 34 புள்ளிகள் வரை	குறைவு	W
(இ)	35 - 49 புள்ளிகள் வரை	சாதாரண சித்தி	S
(ஈ)	50 - 64 புள்ளிகள் வரை	திறமைச்சித்தி	C
(உ)	65 - 74 புள்ளிகள் வரை	விஷேட சித்தி	B
(ஊ)	75 - 100 புள்ளிகள் வரை	அதிவிஷேட சித்தி	A

9.3 பரீட்சை முடிவுகளை வெளியிடல்.- பரீட்சை முடிவுகளைப் பற்றிய விபரங்கள் உரிய நிறுவனங்களது அதிபர்களுக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

10. **சான்றிதழ்.**- பரீட்சை சித்திபெறும் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

11. **விடைத்தாள்கள் மீள்பரிசீலனை.**- பரீட்சை முடிவுகள் வெளி யாகி 30 நாட்களுக்குள் இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் குறிப்பிட்ட நிறுவனத்தின் அதிபர் விண்ணப்பஞ் செய்தால் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். எனினும் இதற்கு உரிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை முடிவுகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே கட்டணம் மீளளிக்கப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விடைப்பத்தி ரங்களைப் பார்வையிடுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகள், அறிவுறுத்தல் களுக்கமைய நடந்துகொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ளதோடு, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்களிருப்பின் அவை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

அநுர எதிரிசிங்ஹ,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை,
2006.02.08

இணைப்பு - 01

பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டமும்

(2004 ஆம் ஆண்டு முதல் நடைபெறும் பரீட்சைகளுக்கானது)

இப்பரீட்சையின் ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியா லங்களைக் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களையுடையதாகும்.

முதலாம் வினாப்பத்திரம்

1. அகீதாவும், ஷரீஆவும் (இஸ்லாமிய கோட்பாடும் மூலாதாரங் களும்) அரபு மொழியும் :

1.1 அகீதா பொது விளக்கம் (அல் இலாஹிய்யாத், அந்நுபுவ்வத், அர்ரூஹானிய்யத், அஸ்ஸம்இய்யாத்)
1.2 அகீதாவின் பிரிவுகள் :
அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா
ஏனைய அகீதாப் பிரிவுகளிற் சில ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜியா, முஃதஸிலா, ஷீஆ
1.3 தெளஹீதும் ஷிர்க்கும் :
ஈமானும், குப்ரும்
ரித்தத், நிபாக்
அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாறு
சட்ட மூலாதாரம் என்ற வகையில் அல்குர்ஆனின் பயன்பாடு
ஸுன்னாவின் தோற்றமும் தொகுக்கப்பட்ட வரலாறும்
சட்டமூலாதாரம்என்ற வகையில்ஸுன்னாவின் பயன்பாடு
ஹதீஸ் கலை வரலாறும் பிரதான முஹத்திஸ்களின் பங்களிப்புகளும்
இஜ்திஹாத் பற்றிய விளக்கம்
துணை மூலதாராம் என்ற வகையில் இஜ்மா
துணை மூலாதாரம் என்ற வகையில் கியாஸ்
பிக்ஹுடைய வரலாறும் பிரதான இமாம்களும்
1.4 அறபு மொழி :
உறுப்பமைய எழுதுதல்
சிறு வாக்கியங்களை எழுதுதல்
இஸ்லாம் பாடத்துடன் தொடர்புடைய அறபுச் சொற்களை எழுதுதல்
முக்கியமான ஸூறாக்களையும், ஆயத்துக்களையும், ஹதீஸ்களையும் பிழையின்றி எழுதுதல்

2. அல்பிக்ஹுல் இஸ்லாமி-இஸ்லாமிய சட்டநெறி :

2.1 இபாதத் பற்றிய விளக்கம் :
இபாதத்தின் பிரிவுகள்
தஹாரத்
2.2 நஜீஸும் அதன் வகைகளும் :
நஜீஸை சுத்தப்படுத்தும் முறை
நீரும் அதன் வகைகளும்
வுழு, தயம்மும், குளிப்பு பற்றிய நடைமுறை ஒழுங்குகள்
2.3 ஸகாத் :
முக்கியத்துவம்
விதிமுறைகள்
திரட்டலும் விநியோகமும்
ஸகாத் மூலம் வறுமைத்தணிப்பும் செல்வப்பங்கீடும்
2.4 நோன்பு :
முக்கியத்துவம்
விதிமுறைகளும் பயனும்
2.5 ஹஜ் :
முக்கியத்துவம்
விதிமுறைகளும் பயனும்
2.6 ஹஜ் நிறைவேற்றும் முறை :
பர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள்
பர்ளான ஹஜ்ஜுக்கு மேலதிகமாகச் செய்யும் ஹஜ்கள்
2.7 இஸ்லாத்தில் உணவு, உடை, உறையுள் பற்றிய கண்ணோட்டமும் நடைமுறைகளும்
2.8 ஜிஹாத் பற்றிய விளக்கம்
2.9 குர்பானிகளும் அறுப்பு முறைகளும்
2.10 சத்தியம் செய்தலும் நேர்ச்சையும்
2.11 முஆமலாத் பற்றிய விளக்கம் :
உழைப்பின் முக்கியத்துவம்
பிரதான கொடுக்கல் வாங்கல் (வியாபாரம்)
ஏனைய கொடுக்கல் வாங்கல் (உ-ம் : இரவல், வாடகை)
வக்பு, வலியத், வராஸத் (பொதுச் சொத்து, உயில் சொத்து, வாரிசுச் சொத்து)
2.12 இஸ்லாத்தில் ஆண், பெண் நிலை :
நிகாஹின் விதிமுறைகளும் பயனும்
குடும்ப வாழ்வு
கணவன் - மனைவி
பெற்றோர் - பிள்ளை உரிமைகளும், கடமைகளும்
தலாக்கும் இத்தாவும்
2.13 ஜினாயத் :
ஹுதூத், கிஸாஸ், தஃஸீர்

3. ஸீராவும் தாரீகும் :

3.1 இஸ்லாத்துக்கு முந்திய அரபு நட்டின் சமய, சமூக நிலை
3.1.1 நபி (ஸல்) அவர்கள்-
நுபுவ்வத்திற்கு முந்திய வாழ்க்கை
* குடும்பம், பரம்பரை
* இளமைப்பருவம்
* நற்குணம்
* திருமணம்

நுபுவ்வத்துக்கும் ஹிஜ்ரத்திற்கும் இடையிலான வாழ்க்கை
* நுபுவ்வத் கிடைத்தல்
* இஸ்லாமிய பிரச்சாரங்களும் விளைவுகளும்
* மிஃராஜ்
* ஹிஜ்ரத்
மதீனா வாழ்க்கை
* சமூக அரசியல் செயற்பாடு
* தற்காப்பு யுத்தங்களும், சமாதான உடன் படிக்கைகளும்
* இஸ்லாம் பூரணத்துவம் பெறல்
ஸஹாப்பாக்களின் அந்தஸ்தும் இஸ்லாத்திற்கான அவர்களது பங்களிப்பும்
குலபாஉர் ராஷிதீன்கள் வரலாறும், அரசியல் பங்களிப்பும்
உமையா, அப்பாசியா ஆட்சிக்காலம்
பைத்துல் முகத்தஸ் - வரலாறு
இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் பங்களிப்பும்
முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்பு
பின்வருவோர் பற்றிய வரலாறு
இமாம் புஹாரி (ரஹ்)
இமாம் ஷாபிஈ (ரஹ்)
இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
இமாம் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்)
இமாம் ஷாதுலி (ரஹ்)
4. அக்லாக் (இஸ்லாமிய ஒழுக்கவியல்) :
4.1 அக்லாக் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம் :
அக்லாக் பற்றிய விளக்கம்
ஈமானுக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பு
அக்லாக்குக்கும் இபாதத்திற்கும் இடையிலான தொடர்பு
உளத்தூய்மை (இஃலாஸ்)
4.2 தக்வா
வரஉ, ஸுஹ்த்
முராகபா, முஹாஸபா
ஷுவ்க் (இறையன்பு)
4.3 ஈகை
தியாகம்
நன்றியுணர்வு
பொறுமை - சகிப்புத்தன்மை - விட்டுக்கொடுத்தல், மன்னித்தல்
பணிவு
நேரம் பேணுதல்
அவையவங்களைப் பேணுதல் நாவு, கண், காது, பாலுறுப்பு
பிறரை மதித்தல்
நீதியும் நேர்மையும்
இளைஞர் - யுவதிகளிடம் காணப்பட வேண்டிய சிறப்பான ஒழுக்கப்பண்புகள்
ஏனைய சமயத்தவர்களுடன் இணைங்கிவாழல்
4.4 இஸ்லாமிய நீதிமுறை

இணைப்பு - 02

குறித்த மாவட்டங்களிலே பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ள நகரங்களும் நகர இலக்கங்களும்

நகரம்	நகர இல.	மாவட்ட இல.
கொழும்பு மாவட்டம்		01
கொழும்பு (மத்தி)	01	
பம்பலப்பிட்டி	02	
களுத்துறை மாவட்டம்		03
பாணந்துறை	07	
களுத்துறை	08	
அளுத்கமை	09	
மாத்தறை மாவட்டம்		05
வெலிகமை	11	
மாத்தறை	12	
கேகாலை மாவட்டம்		07
மாவனல்லை	14	
வரகாபொலை	15	
கன்னத்தோட்டை	16	
புத்தளம் மாவட்டம்		09
நுரைச்சோலை	21	
புத்தளம்	22	
சிலாபம்	23	
பொலன்னறுவை மாவட்டம்		11
கதுறுவெல	27	
கண்டி மாவட்டம்		13
கண்டி	29	
நாவலப்பிட்டி	30	
தெல்தோட்டை	31	
கெலிஓயா	32	
இரத்தினபுரி மாவட்டம்		15
எஹலியகொடை	34	
பலாங்கொடை	35	
கம்பஹா மாவட்டம்		02
திஹாரிய	03	
மாபோல	04	
மல்வானை	05	
நீர்கொழும்பு	06	
காலி மாவட்டம்		04
காலி	10	
தங்காலை மாவட்டம்		06
ஹம்பாந்தோட்டை	13	
குருநாகல் மாவட்டம்		08
குளியாப்பிட்டி	17	
குருநாகல்	18	
மெல்சிரிபுர	19	
பொல்கஹவெல	20	
அநுராதபுர மாவட்டம்		10
அநுராதபுரம்	24	
கெக்கிராவை	25	
கலம்பிதுனுவெவ	26	
மாத்தளை மாவட்டம்		12
மாத்தளை	28	
நுவரெலியா மாவட்டம்		14
நுவரெலியா	33	
பதுளை மாவட்டம்		16
பதுளை	36	
வெலிமடை	37	
மொணறாகலை மாவட்டம்		17
பிபிலை	38	
மட்டக்களப்பு மாவட்டம்		19
காத்தான்குடி	43	
ஏறாவூர்	44	
வாழைச்சேனை	45	
வவுனியா மாவட்டம்		21
வவுனியா	49	
முல்லைத்தீவு மாவட்டம்		23
முல்லைத்தீவு	51	
யாழ்ப்பாண மாவட்டம்		25
யாழ்ப்பாணம்	53	
அம்பாறை மாவட்டம்		18
அக்கரைப்பற்று	39	
பொத்துவில்	40	
கல்முனை	41	
சம்மாந்துறை	42	
திருகோணமலை மாவட்டம்		20
மூதூர்	46	
கிண்ணியா	47	
திருகோணமலை	48	
மன்னார் மாவட்டம்		22
மன்னார்	50	
கிளிநொச்சி மாவட்டம்		24
கிளிநொச்சி	52	

இணைப்பு - 03

பரீட்சைப் பாடத்திட்டம் - (2004 ஆம் ஆண்டுமுதல் நடைபெறும் பரீட்சைகளுக்கானது)

இப்பரீட்சை ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களையுடையதாகும்.

1. ***முதலாம் வினாப்பத்திரம்*** - *அகீதாவும் ஷரீஆவும் (இஸ்லாமிய கோட்பாடும் மூலதாரங்களும்) அரபு மொழியும்*

இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - அகவய வினாக்கள் (20 புள்ளிகள்) :
இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளையும் பிரதான சட்ட மூலதாராங்களையும் இனங்காணல்.
(அ) அர்கானுல் ஈமான்
(ஆ) அகீதாவின் விளக்கம்
(இ) அல் குர்ஆன்
(ஈ) அல்-ஹதீஸ்

இப்பகுதியில் இடம்பெறும் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

1.1(அ) சுருக்க விடையெழுதுதல் - பத்து வினாக்கள் (10 புள்ளிகள்)
(ஆ) பல்தேர்வு வினா - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)
(இ) இடைவெளி நிரப்புதல் - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)

பகுதி II - கட்டமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்) :
தௌஹீதினையும் அதற்கெதிரான விடயங்களையும் துணை மூலதாரங்களையும் தெளிவாக விளங்குதல் :
(அ) தௌஹீதும் அதன் வகைகளும்
(ஆ) தௌஹீதுக்கு எதிரான கொள்கைகள்
(இ) இஜ்மாவும் கியாஸும்
(ஈ) இஜ்திஹாத்தும் முஜ்தஹித்களும்

இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களில் விரும்பிய இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவிலும் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவு வினாக்கள் இடம்பெறும். ஒரு பிரிவு வினாவிற்கு 5 புள்ளிகள் வீதம்(5 X 4 = 20)புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி III - புறவய வினாக்கள் (40 புள்ளிகள்)
சட்டமூலாதாரங்களின் பிரயோகங்களும் அவற்றைப் பின்பற்றி ஒழுகுதலும் :
(அ) அல்குர்ஆன், அல்ஹதீஸ் வரலாறு
(ஆ) அல்குர்ஆனின் முக்கிய ஸூறாக்களையும், ஸூறாவுடன் தொடர்பான அரபுச் சொற்களையும் அரபியில் எழுதுதல்
(இ) பிரதான நான்கு மத்கபுகளும் அவற்றின் இமாம்களும்
(ஈ) இஜ்திஹாதும் ஏனைய முஜ்தஹித்களும்

இப்பகுதியில் தரப்படும் நான்கு வினாக்களிலிருந்து விரும்பி இரு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவும் அறிவு, திறன், மனப்பாங்குகளை மதிப்பிடக்கூடிய கட்டுரை வடிவில் விடையளிக்கப்பட வேண்டியனவாகும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

2. ***இரண்டாம் வினாப்பத்திரம்*** - ***அல்பிக்ஹுல் இஸ்லாமி (இஸ்லாமிய சட்டநெறி)***

இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - அகவய வினாக்கள் (20 புள்ளிகள்)
ஐம்பெரும் கடமைகளையும், ஏனைய அன்றாட நடவடிக்கைகளையும் இபாதத்தாக அமைத்துக்கொள்ளல்.
(அ) தஹாரத்தும் நஜீஸும்
(ஆ) ஐம்பெரும் கடமைகள்
(இ) ஏனைய இபாதத்கள்

இப்பகுதியில் இடம்பெறும் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

1. (அ) பொது விடையெழுதுதல் - பத்து வினாக்கள் (10 புள்ளிகள்)
(ஆ) பல்தேர்வு வினா - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)
(இ) இடைவெளி நிரப்புதல் - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)

பகுதி II - கட்டமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்) :
முஆமலாத், முனாககாத், ஜினாயாத் போன்ற செயற்பாடுகளை இபாதத்துக்களாக்கிக் கொள்ளல்.
(அ) ஐம்பெரும் கடமைகள்
(ஆ) ஸுன்னத்தான இபாதத்துகள்
(இ) திருமணமும் குடும்ப வாழ்வும்
(ஈ) முஆமலாத்
(உ) ஜினாயாத்

இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களில் விரும்பிய இரண்டு வினாக்களுக்கு விடையெழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவிலும் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவுகள் இடம்பெறும். ஒரு பிரிவு வினாவிற்கு 05 புள்ளிகள் வீதம் (4 x 5 = 20) புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி III - கட்டுரை அமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்) :
பர்ளான, ஸுன்னத்தான இபாதத்துகளின் பயன்களையும் தத்துவங்களையும் தெரிந்து செயற்படல்
(அ) ஐம்பெரும் டகமைகள்
(ஆ) தொழில்சார் நடவடிக்கைகள்
(இ) குற்றங்களும் தண்டனைகளும்
(ஈ) திருமணமும் குடும்பவாழ்வும்

இப்பகுதியில் தரப்படும் நான்கு வினாக்களிலிருந்து விரும்பிய இரு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவும் அறிவு, திறன், மனப்பாங்குகளை மதிப்பிடக்கூடிய கட்டுரை வடிவில் விடையளிக்கப்படவேண்டியனவாகும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

3. ***மூன்றாம் வினாப்பத்திரம் - ஸீறாவும் தாரீகும் (நபி (ஸல்) வரலாறும் ஏனைய வரலாறும்)***

இவ்வினாப்பத்தரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - அகவய வினாக்கள் (20 புள்ளிகள்)
நபி (ஸல்) அவர்களினதும், ஸஹாபாக்களினதும் ஏனைய வரலாறுகளையும் தெரிந்து கொள்ளல்.
(அ) ஜாஹிலியாக் கால சமய, சமூக நிலை
(ஆ) நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாறு
(இ) ஸஹாபாக்கள் இஸ்லாத்துக்கு ஆற்றிய பங்களிப்பு
(ஈ) உமையா, அப்பாலியக் காலம்

இப்பகுதியில் இடம்பெறும் அனைத்து வினாக்களுக்கும் சகல பரீட்சார்த்திகளும் விடையளிப்பது அவசியம். இவ்வினா மூன்று பிரிவுகளைக் கொண்டது.

(அ) சுருக்க விடையெழுதுதல் - பத்து வினாக்கள் (10 புள்ளிகள்)
(ஆ) பல்தேர்வு வினா - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)
(இ) இடைவெளி நிரப்புதல் - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)

பகுதி II - கட்டமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்)
நபி (ஸல்) அவர்களினதும் அல்குலபாஉர் ராஷிதீன்களினதும் பங்களிப்புகளை அறிதல்
(அ) நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்வு
(ஆ) நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்வு
(இ) குலபாஉர் ராஷிதீன்கள் வரலாறு
(ஈ) பல்வேறு துறைசார் இமாம்களின் பங்களிப்பு

இப்பகுதியில் தரப்படும் நான்கு வினாக்களிலிருந்து எவையேனும் இரு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவும் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவுகளைக் கொண்டது. ஒரு பிரிவுக்கு 5 புள்ளிகள் வீதம் 5 x 4 = 20 புள்ளிகள் வழங்கப்படும்.
(2 x 20 = 40 புள்ளிகள்)

பகுதி III - கட்டுரை அமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்) :
நபி (ஸல்) அவர்கள் காட்டிய இஸ்லாமிய சமூக அரசியலின் அவசியத்தை உணரச் செய்தல்
(அ) நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு
(ஆ) அல்குலபாஉர் ராஷிதீன்களின் அரசியற் பங்களிப்பு
(இ) முஸ்லிம்களின் அறிவியற் பங்களிப்பு
(ஈ) இலங்கை முஸ்லிம்களின் வரலாறும், பங்களிப்பும்

இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களிலிருந்து எவையேனும் இரு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் முழுமையாக 20 புள்ளிகள் வழங்கப்படும். மொத்தம் 2 x 20 = 40 புள்ளிகள்

4. ***நான்காம் வினாப்பத்திரம்*** - *அல்-அக்லாக் (இஸ்லாமிய ஒழுக்கவியல்)*

இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - நேர் (Objective) வினாக்கள் (20 புள்ளிகள்) :
(அ) ஒழுக்கவியல் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்
(ஆ) தக்வா
(இ) ஈகை
(ஈ) இஸ்லாமிய நீதி

இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களுக்கும் அனைவரும் விடையளிப்பது அவசியம். ஒவ்வொரு வினாவுக்கும் ஐந்து புள்ளிகள் வீதம் இருபது (20) புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி II - கட்டமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்) :
ஈமானும் நற்குணங்களும்
ஆன்மாவுடன் தொடர்புடைய பண்புகள்
சமூக உறவுடன் தொடர்பான பண்புகள்
நேரம் பேணல், அவயவங்களைப் பேணுதல்

இப்பகுதியில் தரப்படும் நான்கு வினாக்களில் இரண்டு வினாக்களுக்கு விடையளிப்பது அவசியம். ஒவ்வொரு வினாவும் அ, ஆ, இ, ஈ ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டவை. ஒரு பகுதிக்கு 5 புள்ளிகள் வீதம் 5 x 4 = 20 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி III - கட்டுரை அமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்)
(அ) இஸ்லாமிய நற்பண்புகள் ஊடாக மனிதநேயம் வளர்ச்சி பெறல்
(ஆ) இபாதத்துக்கள் உடாக நற்பண்புகள் வெளிப்படல்
(இ) படைப்புகள் மீது அன்பு கொள்ளல்

(ஈ) இஸ்லாமிய நீதிமுறை

(உ) இளைஞர் யுவதிகளிடம் காணப்படவேண்டிய ஒழுக்கப் பண்புகள்

இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு இருபது புள்ளிகள் வீதம் இரண்டு வினாக்களுக்கு நாற்பது புள்ளிகள். 2-777

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் III-ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பு உத்தியோகத்தர் களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை மே மாதம் கொழும்பில் நடைபெறும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

2. பரீட்சைக்குரிய பாடவிதானங்கள் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் கொண்டதும் 1986.10.15 ஆந் திகதிய 423/12 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. வசதிக்காக அப்பாட விதானங்கள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன.

பரீட்சை நடவடிக்கை முறைகள்.-

(அ) 1 ஆவது வினைத்திறன்தடைதாண்டற் பரீட்சையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் :-

பாட இல. 001 பொது நிர்வாகம் - இலங்கைச் சனநாயகக் குடியரசின் அரசியல் யாப்பு, தாபன விதிக்கோவை, அரசாங்கத்தின் வேறும் சட்ட திட்டங்கள்.

பாட இல. 002 நிதி

பாட இல. 003 கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை.

(ஆ) உத்தியோகத்தர் ஒருவர் I ஆவது வினைத்திறன் தாண்டற் பரீட்சைக்கு உரிய பாடங்களுக்காக ஒரு தடவையேனும் அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்றியிருக்க முடியும்.

(இ) சகல வினாப்பத்திரங்களும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டது.

3. **பாடவிதானம் :**

(I) *பொது நிர்வாகம்*

(அ) இலங்கை அரசியல் யாப்பு

இலங்கை (அரசியல் யாப்பு) அரசகட்டளை 1946 மற்றும் 1947 (379 ஆவது சரத்து)

1948 இல. 18 கொண்ட பிரஜாவுரிமைச் சட்டம் (349 வது சரத்து)

1972, மே 22 ஆந் திகதி விதித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் யாப்பு.

1980 இல. 44 கொண்ட வாக்காளர்களைப் பதிவுசெய்யும் சட்டம்.

1981 இல. 1 கொண்ட பாராளுமன்ற தேர்தல் சட்டம்.

1981 இல. 7 கொண்ட கருத்துக் கணிப்பீட்டுச் சட்டம்.

1981 இல. 15 கொண்ட சனாதிபதியைத் தெரிவுசெய்யும் சட்டம்.

(ஆ) தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகள் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய சட்ட திட்டங்கள்

தாபனவிதிக் கோவையில் I, II, III,IV, V, VI, VII, IX, X, XI, XXV, XXVI, XVII, XXIX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII கொண்ட சரத்துக்கள். (1971 இணைப்பு)

(II) ***நிதி***

(அ) அரச நிதிப் பிரமாணங்கள் 1 ஆவது பகுதி (X ஆவது சரத்துத் தவிர)

(ஆ) தற்போதைய ஆண்டின் வருமானம் மற்றும் செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தல். வருமானத் தலைப்பு நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டம்

(இ) கல்வி மற்றும் அலுவலக மூலம் மேற்கொள்ளப்பட்ட உரிய நடவடிக்கைகளுக்கான கட்டளைச் சட்டம் மற்றும் ஏனைய சட்டதிட்டங்கள்.

(III) *கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை*

(அ) பரீட்சார்த்திகள் கீழ்க் குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டம் மற்றும் பாராளுமன்ற சட்டங்கள் தொடர்பாக அறிவு மற்றும் விளக்கம் பெற்றிருக்க வேண்டும் :-

1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கொண்ட கட்டளைச் சட்டம்

1947 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க மறுசீரமைக்கப்பட்ட கட்டளைச் சட்டம்

1951 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க மறுசீரமைக்கப்பட்ட சட்டம்

1953 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க மறுசீரமைக்கப்பட்ட சட்டம்

அரச பாடசாலைகள் தொடர்பான பிரமாணக் குறிப்பு :

1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரிய கல்லூரிகள் (விசேட ஒழுங்கு விதிகள்) சட்டம்.

1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடைகள் பாடசாலைகள் ஆசிரிய கல்லூரி (மேலதிக ஒழுங்கு விதிகள்) சட்டம்.

1973 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கல்வி (பதவிப் பெயரை மாற்றுதல்) சட்டம்

1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவெனா சட்டம்

1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடைகள் பெறும் மற்றும் ஆசிரிய கல்லூரிகள் (விசேட ஒழுங்குவிதி மறுசீரமைப்புச் சட்டம்)

1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி தாபன சட்டம்.

(ஆ) கல்வி நிர்வாகம் :

கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சின் கொள்கை

மாகாண கல்வித் திணைக்களம் உட்பட அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் கல்வி உயர்கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பு உட்பட பணிகள்

தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான கல்வித் திட்டமிடல். நோக்க முறைகள் (பாடசாலை திட்டமிடல் உட்பட) அமுலாக்கல் என்பனவும்.

பாடசாலை முகாமைத்துவம், பாடசாலை சமூகத் தொடர்பாடல் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை. விசேட கல்வி நிகழ்ச்சித் திட்டம்

(இ) *கல்வி மேற்பார்வை.-* பாடசாலை மேற்பார்வைக்கான திட்டமிடல் மற்றும் ஆசிரியர்களின் செயற்சாதனை மதிப்பீட்டுக்காக பயன்படுத்தும் மாதிரிகள்

பாடசாலைகளின் தொடர்ச்சியான மதிப்பீட்டு வேலைத் திட்டம்.

பாடசாலைகளின் சுய மதிப்பீட்டு வேலைத் திட்டம்.

மாகாண கல்வி திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சினால் பாடசாலை மேற்பார்வை செய்தல்.

வெளிக் குழுக்கள் மூலம் உள்ளக மதிப்பீட்டு மேற்பார்வை.

(கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வெளியிடப் பட்டிருக்கும் சுற்றறிக்கை, கைநூல், மற்றும் ஏனைய வெளியீடுகள் தொடர்பாக தெளிவான விளக்க மொன்றைப் பெற்றுக் கொள்ளுமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப் படுகிறது.

பரிந்துரை செய்யப்பட்ட நூல்கள் மற்றும் வெளியீடுகள்:

கல்வி நிருவாகம் தொடர்பான புதிய முகாமைத்துவ சிற்ப திட்டமிடல் கருத்தரங்கொன்றின் அறிக்கை கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகம் தொடர்பான ஆசிய நிறுவனம் (1970) புதுடில்லி

பாடசாலையொன்றை நடாத்திச் செல்லல் - பறி மற்றும் இற்ரை (டாம்பல் ஸ்மித் லண்டன்) 1975

பாடசாலை முகாமைத்துவ முறை - புக் டி க்லட்டர்

ஆர் குட் மற்றும் சி நிவர்ஸ் ஆகிய நூலாசிரியர்கள் 1980 (சார்ப்பர் மற்றும் ஜோ)

பாடசாலை நிர்வாகம் - கலாநிதி கான் முஹியதீன் பெரிவ் புதுடில்லி 1983

இலங்கைக் கல்வி - கல்வி அமைச்சு இலங்கை 1969

கல்வி மற்றும் கலாசார விவகார அமைச்சின் நூற்றாண்டுவிழாப் பிரிவு - II மற்றும் III ஆகிய பகுதிகள்

பாடசாலைகளில் கொள்கைத் தயாரித்தல், அமைப்பு மற்றும் தலைமைத்துவம் (ஈ 323, 4 ஆவது பிரிவு)

திறந்த பல்கலைக் கழகம், திறந்த பல்கலைக்கழக அச்சகம் லண்டன் (1981)

பாடசாலையில் மதிப்பீடு - சிப்மன், மார்டன், ஹய்ஸ்மன், கல்வி நூல் லண்டன் (1984)

கல்வி அமைச்சின் முகாமைத்துவ மறுசீரமைப்பு தொடர்பான அறிக்கை.

கல்வி அமைச்சு 1984

கல்வி மறுசீரமைப்பு ஆலோசனை (வெள்ளை அறிக்கை) 1982

கல்விச்சட்டம் - யு. டி. ஜ - சிரிசேன

4. சித்திக்காக ஒவ்வொரு பாடத்திலும் மொத்த புள்ளிகளில் 40% பரீட்சார்த்திகளினால் பெறப்பட வேண்டும்.

5. **பரீட்சையின் மொழி.-** (i) பரீட்சார்த்திகள் அரசகரும மொழி அல்லது தேசிய மொழி ஆகியவற்றில் ஏதாவதொரு மொழிமூலம் பதிலளிக்க முடியும்.

(ii) பரீட்சார்த்தி அரச சேவையில் இணைந்துகொள்ள முன்னர் தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி அல்லது போட்டிப் பரீட்சையின்றி அரச சேவைக்கு இணைந்து கொண்டவர்கள் தொடர்பாக அரச சேவைக்கு இணைவதற்கு தகைமை பெற்று பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் பதிலளிக்க வேண்டும்.

6. பரீட்சார்த்திகள் தமக்கு உரிமையற்ற மொழிமூலம் தோற்றுவதற்காக தெரியவந்தால் அவரது பரீட்சார்த்தி தன்மை ரத்தாகும்.

7. விண்ணப்பப்படிவங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரிப் படிவத்திற்கமைய புல்ஸ்கேப் கடதாசியில் தயாரித்து அனுப்ப வேண்டும். புல்ஸ்கேப் கடதாசியின் இரு பக்கங்களும் பயன்படுத்தப்பட வேண்டும்.

8. பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவ துடன், பரீட்சையை நடாத்துவதற்காக அவரால் விதிக்கப்பட்டிருக்கும் சட்ட விதிகளை பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டும். பரீட்சைக்கான சட்ட ஒழுங்குகள் இவ்வறிக்கையின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9. விண்ணப்பப்படிவங்கள் 2006, மார்சு 24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பத்தரமுல்லை, பெலவத்த, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பரீட்சை ஆணையாளர்" இற்குக் கிடைக்கக்கூடியவாறு திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

10. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கு 7 நாட்களுக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்காவிட்டால் அவர் அது குறித்து தாமதமின்றி "பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளையின்பரீட்சை ஆணையாளர் நாயகம்" இற்கு அறிவிக்க வேண்டும்.

(தொலைமடல்மூலம் அனுப்பப்பட வேண்டிய முகவரி.- "பரீட்சைத் திணைக்களம், பத்தரமுல்லை" என்ற விலாசத்திற்காகும்)

அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாவிடின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டியதுடன் கீழ்க் குறிப்பிடப்பட்ட தகவல்களையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;

(ii) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;

(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;

(iv) விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட்ட திகதி, பதிவுத் தபால் இலக்கம், தபாலகத்தின் பெயர்.

அண்மித்தவர்கள் அறிவித்தல் மூலம் பரீட்சை ஆணையாளர் நாயகம் (இ) கிளைக்கு அறிவிக்குமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது.

11.மேற்கூறப்பட்ட 09 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத பட்சத்தில் பரீட்சார்த்திகளினால் பின்னர் அறிவிக்கப்படும் எந்த முறைப்பாடுகள் சம்பந்தமாகவும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

12. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிசெய்வ தற்கான சான்றுகளை சமர்ப்பிப்பது பரிட்சார்த்திகளின் பொறுப் பாகும். அதற்கென ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை மற்றும் செல்லுபடியாகக்கூடிய வெளிநாட்டு கடவுச்சீட்டு ஆகியவை மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அடிப்படையில் பரீட்சைக் கட்டணங்களை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

(அ) முதல் தடவை (முழுமையான பரீட்சைக்கு அல்லது பகுதிக் கான கட்டணம் அறவிடப்படமாட்டாது)	
(ஆ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைக்குமாக	ரூபா ச.
முழுமையான பரீட்சைக் கட்டணம்	225.00
ஒரு பாடத்திற்கு	75.00

பரீட்சார்த்திகளினால் கையொப்பமிட்டு உரியவாறு இரத்துச் செய்யப்படும் வருமான முத்திரை மூலம் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

ஆரியரத்ன ஹேவகே,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு.
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2006, பெப்புருவரி 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பு
உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை

("பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பரீட்சை ஆணையாளர் நாயகம்" இற்கு திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் அனுப்புவதற்காக.)

(பரீட்சையின் பெயரைக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்).

1. (அ) முதலெழுத்துக்களுடன் இறுதியில் வரும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்)
(வண./திரு./திருமதி / செல்வி) :-----.
உம்.- Rev/Mr./Mrs/Miss SILVA S. A.
(ஆ) முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.
2. பிறந்த திகதி :-----.
3. (i) பதவிப் பெயர் :-----.
(ii) திணைக்களம்/வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் / கோட்ட/பாடசாலை :-----.
4. முகவரி :-
(i) அலுவலக முகவரி :-----.
(ii) சொந்த முகவரி :-----.
(iii) பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.
5. அறிவித்தலின் 2 ஆவது பந்தியின் (அ) இன் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள விடய இலக்கம் கொண்ட பாடங்கள் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் :-
பாட இலக்கம் :-----. பாடம் :-----.
பாட இலக்கம் :-----. பாடம் :-----.
பாட இலக்கம் :-----. பாடம் :-----.
6. உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-----.
7. இப்பரீட்சைக்கு முன்னர் முழுமையாக அல்லது ஒரு பகுதி தோற்றியுள்ளீரா? அவ்வாறாயின் பாடம் மற்றும் தோற்றிய ஆண்டு மற்றும் மொழி குறிப்பிடப்பட வேண்டும் :---.

ஆண்டு	பாடம்	மொழி
----------	----------	----------
----------	----------	----------
----------	----------	----------

8. மேற்கூறப்பட்ட விடயங்கள் உண்மையென்றும், மேற்கூறப்பட்ட 05 ஆவது வாசகத்தில் உள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரிமை உண்டு என்றும் தெரிவிக்கின்றேன் :-----.
9. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :-

முத்திரை இங்கே ஒட்டவும்

----------,
பரீட்சார்த்தியின் கையொப்பம்

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர்.

சமர்ப்பிக்கிறேன்;

இவ்விபரம் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை கொண்டவர் என்றும் அறிவித்தலின் 5 ஆவது பந்தியில் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற அவருக்கு தகைமை உண்டு எனவும் உறுதி செய்கிறேன்.

பரீட்சார்த்தி முத்திரையை உரியவாறு இரத்துச் செய்வதாகவும்* உறுதியளிக்கிறேன்.

.....
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவியின் பெயர்.
பதவி இலச்சனை.

திகதி :-----.

(*) கட்டணம் செலுத்தும் போது இரத்துச் செய்யவும்.

2-790

சமுர்த்தி முகாமையாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2005

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையினை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2006, யூன் மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

2. **பரீட்சை முறையும் விடயப் பாடத்திட்டங்களும்**.- இவ் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குக் கீழ்க்குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் உள்ளடக்கப்படுவதுடன் அது பிரதானமாக இரு வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும். ஒரு வினாப்பத்திரத்திற்கான நேரம் 3 மணித்தியாலங்கள் ஆகும். ஒரு வினாப்பத்திரத்திற்கு வழங்கப்படும் மொத்தப்புள்ளிகள் 100 என்பதுடன் தேறுவதற்கு தேவையான ஆகக்குறைந்த புள்ளிகள் 50 % ஆகும்.

முதலாவது வினாப்பத்திரம்

1. பொருளாதார அபிவிருத்தி :

(i) இலங்கையின் தேசிய வருமானம் பற்றிய விபரங்கள்
(ii) அரசியல்/ நிர்வாக அதிகாரங்களைப் பரவலாக்குவதும், தொடர்புடைய நிகழ்கால நிலைமைகள்/ பிரச்சினைகள்/ பின்னணிகள்
(iii) அரசின்/ அரச சார்பற்ற நிறுவனங்கள் சார்ந்த வறுமை ஒழிப்பு வேலைத்திட்டங்கள்
(iv) இலங்கையின் மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களினதும் செயற்பாடுகள்/ நிகழ்கால கடமைகள்
(v) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குரிய விசேடமான வேலைத்திட்டங்கள்
(vi) இலங்கையில் செயற்படுத்தப்படுகின்ற பிரதேச/ தேசிய மட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி
(vii) இலங்கையில் விவசாயத்துறை சார்ந்த நிகழ்கால போக்கு/ பின்னணி/ பிரச்சினைகள்

2. வணிகமும் வங்கி நடவடிக்கைகளும் :

(i) வங்கிச் சங்கத்தின் நிர்வாகம்
(ii) வங்கிச் சங்கத்தின் நிதி நிர்வாகம்
(iii) வங்கிச் சங்கத்தின் கணக்கு செயற்பாடுகள்
(iv) வங்கிச் சங்கத்தின் கடன் செயற்பாடுகள்
(v) வங்கிச் சங்கத்தின் வைப்புக்களை ஒன்று சேர்க்கும் நடவடிக்கைகள்
(vi) வங்கிச் சங்கத்தின் முதலீட்டுச் செயற்பாடுகள்
(vii) அதிகாரசபையினால் (வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவு) வெளியிடப்பட்டுள்ள வங்கிச் சங்க நெறிப்படுத்தல் ஆலோசனைகள்
(viii) மகாசங்கங்களின் நிதி நிர்வாகம்
(ix) மகாசங்கங்களினது கணக்கு நடவடிக்கைகள்
(x) மகாசங்கங்களினது முதலீட்டு நடவடிக்கைகள்
(xi) அதிகாரசபையினால் (வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவு) வெளியிடப்பட்டுள்ள நெறிப்படுத்தல் ஆலோசனைகள்

இரண்டாவது வினாப்பத்திரம்

(i) அலுவலக முறைகள்
(அலுவலக முறையின் முக்கியத்துவங்கள், அடிப்படைக் கோட்பாடுகள், கிடைக்கப்பெறுகின்ற கடிதங்கள் மற்றும் அனுப்பப்படுகின்ற கடிதங்கள் தொடர்பாக செயற்படுதல், கோவைகளில் குறிப்பெழுதுதல், பொது மக்களுடன் அலுவல்களை மேற்கொள்வது தொடர்பான விளக்கங்கள்)
(ii) தாபனக் கோவை - (I, II, III, IV, VII, XII, XIV, XV, XXV பிரிவுகள்)
(iii) நிதிப் பிரமாணங்கள் (I, II, III, XIII பிரிவுகள்)

3. இப்பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரமே நடைபெறும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப் படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பதாரிகள் சுயமாக விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டியது A4 அளவுத்தாள்களில் மாத்திரம் ஆகும். விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டியது பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழியில் ஆகும்.

4. விண்ணப்பப்படிவத்தினை தனது நிறுவனத் தலைவர் மூலமாக (மாவட்டச் செயலகம்/ பிரதேச செயலகப் பிரிவில் இணைப்புச் செய்யப்பட்டிருந்தால் அதனை மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் மூலம்) 2006 மார்ச்சு மாதம் 24 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இவ்விண்ணப்பப் படிவங்கள் அரச மொழியில் அல்லது தான் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழிக்கமைய தயாரித்துக்கொள்ளலாம்.

5. எவரேனும் ஓர் விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்குத் தோற்றுவ தற்கான அனுமதி அட்டை 7 நாட்களுக்கு முன்னர் கிடைக்கப் பெறாவிடின் அவர் அதனை தாமதமின்றி கீழ்க் குறிப்பிடுகின்ற தகவல்களுடன் "பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகம்" இற்கு அறிவித்தல் செய்தல் வேண்டும். தந்தி மூலம் அனுப்பப்படவேண்டிய முகவரி : "பரீட்சைகள், பத்தரமுல்லை".

(1) பரீட்சையின் பெயர் ;
(2) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(3) விண்ணப்பதாரியின் முகவரி ;
(4) விண்ணப்பப்படிவம் தபாலிலிடப்பட்ட தபால் அலுவலகம் ;
(5) பதிவு இலக்கமும் திகதியும்.

6. **ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் தான் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சகர் திருப்திப் படக்கூடியவாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்குக் கீழ் குறிப்பிடப்படுகின்ற ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அடையாள அட்டை
(2) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.

7. இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் அவரால் பரீட்சை நடைபெறுவது தொடர்பில் வழங்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும்.

8. இப்பரீட்சையில் தோற்றுவதற்கு விண்ணப்பித்துள்ள சகலருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு தங்களது அலுவலக தலைவர்களினால் கடமை தின விடுமுறை வழங்கப்படல் வேண்டும்.

9. இப்பிரமாணங்களில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் விருப்பத்தின் பிரகாரம் அவை தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ரவீந்திர ஹேவாவித்தாரன,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகார சபை,
4 ஆவது மாடி,
செத்சிறிபாய,
பத்தரமுல்லை.

சமுர்த்தி முகாமையாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2005

சுட்டெண்

(அலுவலக உபயோகத்திற்கு)

1.0 பெயர் :-----.
1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் :- திரு./திருமதி/செல்வி) :-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்)
(உம் :- Mr./Mrs/Miss/SILVA A. B.)
1.2 முழுப் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
1.3 முழுப் பெயர் :-----.
(சிங்களம்/ தமிழ்)
2.0 அலுவலக முகவரி :-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
2.1 நிரந்தர முகவரி :-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
2.2 நிரந்தர முகவரி :-----.
(சிங்களம்/ தமிழ்)
2.3 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படவேண்டிய முகவரி :-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
3.0 பரீட்சைக்குத் தோற்றும் மொழி :-----.
சிங்களம் - S
தமிழ் - T
(உரிய கூட்டினுள் ஆங்கில எழுத்தினைக் குறிப்பிடவும்)
4.0
4.1 பால் : (ஆண்/பெண்) :-----.
பெண் - F, ஆண் - M
(உரிய கூட்டினுள் ஆங்கில எழுத்தினைக் குறிப்பிடவும்)
4.2 சிவில் நிலை :-----.

திருமணமானவர் - M, திருமணமாகாதவர் - S
(உரிய கூட்டினுள் ஆங்கில எழுத்தினைக் குறிப்பிடவும்)
4.3 பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.
4.4 2006, மார்சு 15 ஆந் திகதியன்று வயது :-----.
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.
5.0 பதவியும் தரமும் :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் விண்ணப்பித்துள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிமை உள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

.....
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
சமர்ப்பிக்கின்றேன்.
மேலுள்ள விபரங்களில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பதாரி இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகுதியுண்டு எனவும், அவரால் கொடுக்கப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுண்டு என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.....
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

2-811

சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு

மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு
ஆட்சேர்த்துக்கொள்ளுதல் - 2006

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழே குறிப்பிடப் படும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கையின் (விவாகமாகாத) பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (ஆட்சேர்த்துக்கொள்ளும் மொத்த எண்ணிக்கையில் 5% ஆண்கள்)

1. **கல்வித் தகைமைகள்**.- (அ) 2004 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்றி குறைந்த பட்சம் மூன்று விஞ்ஞான பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல்.

(ஆ) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம், தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

2. **ஏனைய தகைமைகள்**.- (அ) 2006.03.24 ஆந் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(ஆ) உயரம் 4 அடி 10 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல்.

(இ) திருமணமாகாதவராக இருக்க வேண்டும்.

(ஈ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்ற விரும்புதலும், நல்ல சுகதேகியுமாகவும் இருத்தல் வேண்டும்.

(உ) தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தினுள் முன்றாண்டுகள் குடியிருப்பை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரியின் பெயர் வாக்காளர் பெயர்ப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டில்லாவிடின் அவனது/ அவளது பெற்றோர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும்.

அவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பின் அப்பெயர்கள் தனது பெற்றோர்களின் பெயர்கள் என்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்து அனுப்ப வேண்டும்.

மேற்படி தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்ப தாரர்கள் மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படும் என்பதுடன் 2004 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின்படி அவ்வாண்டில் சமமாகும் வகையில் மாவட்ட அடிப்படையின் மீது தேவையான எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்படும்.

3. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- (அ) இவ்வறிவித்தலில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின்படி 8 1/2" x 13 1/2" அங்குல அளவுள்ள தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்திக்கொண்டு விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள இலக்கம் 01 முதல் இலக்கம் 09 வரை உள்ள பிரிவுகள் முதல் பக்கத்திலும் இலக்கம் 10 ஆம் பிரிவு இரண்டாம் பக்கத்திலும் இலக்கம் 11 முதல் 14 வரையிலான பிரிவுகள் 03 ஆம் பக்கத்திலும் இருக்கும் வகையில் விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தை உரிய முறையில் பூரணப்படுத்தி விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2006" எனக் குறிப்பிட்டு 2006.03.24 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்பு, "பணிப்பாளர் (நிர்வாகம்) 01, சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு, சுவசிரிபாய, 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தாமதமாகி பெறப்படும் விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படுவதுடன் தபாலில் காணாமற் போதல், தாமதித்தல் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இலங்கை நிர்வாக சேவையில்/கல்விச் சேவையில்/அரசாங்கத்தின் கணக்காளர் சேவையில்/ அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்தம் ரூபா 80,160 இற்குக் குறையாத சம்பளம் பெற்றுக்கொள்ளும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள முத்திரைக் கூட்டில் ரூபா 100 ற்கான முத்திரை ஒட்டி கையொப்பம் இட்டு செல்லுபடி அற்றதாக்க வேண்டும்.

4. பயிற்சித் திட்டம்.- (அ) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாணவ ஆண்/ பெண் தாதிமார்களாக தாதிமார் பயிற்சிப் பாடசாலைக்கு உட்படுத்தப்படுவதுடன், அவர்கள் சிங்களம்/ தமிழ் மொழிமூலம் 03 ஆண்டுகள் பயிற்சிப்பாடத்திட்டம் ஒன்றை பயிலுதல் வேண்டும்.

(ஆ) பயிற்சியின் பொருட்டு உட்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தாதிமார் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவிலுள்ள சட்டதிட்டக் கோவையொன்று பயிலுநர்களுக்கு வழங்கப்படும். இச்சட்ட திட்டங்களுக்கும் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய சட்டதிட்டங்களுக்கும் அவர்கள் அமைதல் வேண்டும்.

(இ) பயிற்சி பெறும் கால எல்லையினுள் குறிப்பிட்ட பரீட்சைக ளினால் தேர்ச்சி அடையாத அல்லது வேலையும் நடத்தையும் திருப்தியற்ற அல்லது தான் உட்படுத்தப்பட்ட பாடசாலையின் பரீட்சைகளையும் விடுமுறை நிபந்தனைகள் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கத் தவறும் பயிலுநர்களின் பயிற்சி எச்சந்தர்ப்பத்தில் ஏனும் நட்டஈடு எதுவுமின்றி நிறுத்தப்படலாம்.

பயிற்சிக் காலத்தில் எந்தவிதமான விடுதலைகளுக்கும் உரித்தில் லாததோடு இக்காலத்தில் வரவின்மைக்காக விசேட கொடுப்பன விலிருந்து ஒரு தொகை கழிக்கப்படும் அத்தோடு பரீட்சை எழுதுவதற்கு 80% ற்குக் குறையாத வரவு இருத்தல் வேண்டும்.

(ஈ) தாதிமார் பாடசாலையொன்றில் பயிற்சி பெறும் காலத்தில் பயிலுநர்களுக்குக் கீழே குறிப்பிடப்படும் வகையில் கொடுப்பனவு வழங்கப்படும் :-

(1) முதலாம் வருடம் - ரூபா 60,180
(2) இரண்டாம் வருடம் - ரூபா 61,500
(3) மூன்றாம் வருடம் - ரூபா 62,820

பயிற்சியைத் திருப்திகரமாகப் பூரணப்படுத்திய பின்பு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த பயிலுநர்களுக்கு II ஆம் தரத்தின் "ஆ" பிரிவின் பதவி வெற்றிடங்கள் ஏற்படும் வகையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமனங்கள் வழங்கப்படும்.

(உ) பயிற்சி பெறும் காலத்தில் பயிற்சிகளினின்றும் விலகிக் கொண்டால் அல்லது பயிற்சியை விட்டுச் சென்றால் பயிற்சிக்காலத்தில் அவனுக்கு/ அவளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் பொருட்டு செலவிடப்பட்ட பணமும் அரசாங்கத்திற்கு/ அரசிற்கு அவன்/ அவள் திணைக்களத் திற்குச் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாவிடின் அப்பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும்.

5. விவாகமாகாத நிபந்தனைகளும் உடன்படிக்கையும் - (அ) சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்களை அனுப்பும் திகதியில் விவாகமாகாதவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் பயிற்சி பெற்றுக்கொள்ளும் மூன்றாண்டு காலத்தினுள்ளும் விவாகமாகா திருத்தல் கட்டாயமாகும். விவாகம் ஆகாதவர் என்பதை உறுதிப்படுத் துவதன் பொருட்டு கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது பிரதேச சபைச் செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) ஆண்/பெண் தாதிமார், தாதிமார் பயிற்சிப் பாடசாலைக்கு உட்படும் பொழுது திருப்திகரமாகப் பயிற்சியை முடிப்பதென்றும் பயிற்சியைப் பூரணப்படுத்திய பின்பு குறைந்தபட்சம் 10 ஆண்டு காலம் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சேவையாற்றுவதென்றும் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் உடன்படிக்கை யொன்றுக்கு உட்படுதல் வேண்டும். சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் இக்கால எல்லை காலத்திற்குக் காலம் தீர்மானிக் கப்படும்.

6. சேவையில் ஈடுபடுத்தும் நியதிகள்.- (அ) மேற்படி பயிற்சியின் பின்பு நடாத்தப்படும் இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகளின் மீது நியமிக்கப்படும் பதவிநிலைத் தாதிமார் பதவிகள் உதவித்தொகை ஓய்வூதியத்துடன் கூடியது.

(ஆ) II ஆம் தரத்தின் "ஆ" பிரிவின் பதவிநிலை தாதிமார் பதவிகளுக்கு மூன்று ஆண்டுகள் தகுதிகூர் நிலைக்காலத்திற்கு அமைவாக நியமிக்கப்படும்.

7. **சேவை நிபந்தனைகள்**.- (அ) சகல பயிலுநர்களும் பயிற்சி ஆரம்பிக்க முன்பு மருத்துவ சோதனை செய்வித்துக்கொள்ளல் வேண்டும்.

(ஆ) வருடாந்தம் ரூபா 1,38,120 - 7 x 1,800 - 5 x 2,880 - ரூபா 1,65,120 சம்பள அளவுத்திட்டத்தின் பொது சுற்றறிக்கை இலக்கம் 2/130/205 (2005.09.14) படி தாதி உத்தியோகத்தர் II ஆம் தரத்தின் "ஆ" பிரிவின் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களின்படி நியமிக்கப் படும்.

(இ) தாதிமார் சேவையின் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் நியமிக்கப்படும் கோட்பாடுகளின்படி புரியப்படும் இடமாற்றங்கள், நிதி உட்பட ஏனைய ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தினால் அடிக்கடி விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமைதல் வேண்டும்.

செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

சுகாதார பராமரிப்பு மற்றும் போசனை அமைச்சு

மாணவ ஆண்/பெண் தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்ளுதல் - 2006

1. (அ) முதலெழுத்துக்களுடன் இறுதிப்பெயர் (ஆங்கில கெபிடல் எழுத்தில்) :-----.
   (ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெபிடல் எழுத்தில்) :-----.
2. தபால் முகவரி (ஆங்கிலத்தில்) :-----.
3. (i) நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :-----.
   (ii) மாவட்டம் (ஆங்கிலத்தில்) :-----.
4. பிறந்த திகதி :-----.
   வருடம் :-----. மாதம் :-----. திகதி :-----.
5. பால் :-

ஆண்	
பெண்	

(ஏற்புடைய கூட்டில் "✓" அடையாளம் இடவும்)

6. விவாகமானவரா/விவாகமாகாதவரா :-----.

ஆம்	
இல்லை	

(ஏற்புடைய கூட்டில் "✓" அடையாளம் இடவும்)

7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
8. உயரம் :-----.
   அடி :-----. அங்குலம் :-----.
9. பயிற்சி பெறுவதற்கு எதிர்பார்க்கும் மொழி மூலம் :-----.

சிங்களம்	
தமிழ்	

(ஏற்புடைய கூட்டில் "✓" அடையாளம் இடவும்)

10. கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உ. த.) பரீட்சையில் (விஞ்ஞான விடயம்) :-----.
    (புள்ளிகள் குறிப்பிட்ட பிரதியை இணைக்கவும்)
    (i) 2004 ஆம் ஆண்டு :-----. சுட்டிலக்கம் :-----.

பாடம்	தரம்	அலுவலக உபயோகத்திற்கு
1.		
2.		
3.		
4.		

(ஆ) க. பொ. த. (சாதரண) பரீட்சை :-
   (i) பரீட்சையின் வருடமும் மாதமும் :-----.
   (ii) சுட்டிலக்கம் :-----.
   (iii) முதலமர்வு :-----.

பாடம்	தரம்	அலுவலக உபயோகத்திற்கு
1.		
2.		
3.		
4.		
5.		
6.		
7.		
8.		

   (i) பரீட்சையின் வருடமும் மாதமும் :-----.
   (ii) சுட்டிலக்கம் :-----.
   (iii) இரண்டாம் அமர்வு :-----.

பாடம்	தரம்	அலுவலக உபயோகத்திற்கு
1.		
2.		
3.		
4.		
5.		
6.		
7.		
8.		

11. நீதிமன்றமொன்றில் எப்போது ஏதாவது குற்றம் தொடர்பில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? :-----.

ஆம்	
இல்லை	

ஆம் எனின் விபரம் தருக :-----.

12. உங்களை மாணவ தாதிப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் பயிற்சிபெற விரும்பும் தாதிமார் பாடசாலையை உங்கள் விருப்பத்தின் எண் ஒழுங்கின்படி கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடுக :-----.

கொழும்பு தாதிமார் பாடசாலை	
கண்டி தாதிமார் பாடசாலை	
யாழ்ப்பாணம் தாதிமார் பாடசாலை	
கந்தானை தாதிமார் பாடசாலை	
அனுராதபுரம் தாதிமார் பாடசாலை	
காலி தாதிமார் பாடசாலை	
குருநாகல் தாதிமார் பாடசாலை	
பதுளை தாதிமார் பாடசாலை	
இரத்தினபுரி தாதிமார் பாடசாலை	
மட்டக்களப்பு தாதிமார் பாடசாலை	
ஸ்ரீஜயவர்தனபுர தாதிமார் பாடசாலை	
அம்பாறை தாதிமார் பாடசாலை	

13. விண்ணப்பதாரரின் சான்றிதழ்

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவிற்கும் எட்டியவகையில் உண்மையானவைகள் எனவும், சரியானவைகளெனவும் கௌரவத்துடன் வெளிப்படுத்துகிறேன்.

(ஆ) என்னால் தரப்பட்டுள்ள இத்தகவல்கள் பொய்யானவைகள் எனக் கண்டுபிடிக்கப்படின் சேவைக்கு ஆட்சேர்த்துக்கொள் வதற்கு முன்பு தகுதியற்றவன் எனவும் நியமனத்தின் பின்பு அவ்வாறு கண்டுபிடிக்கப்படின் சேவையினின்றும் விலக்கப் படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

இங்கு ரூபா 100 ற்கான முத்திரை ஒட்டி அதன் மேல் கையொப்பம் இட்டு செல்லுபடி அற்றதாக்குக.

.....
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .....
.....
என்பவரை நான் நன்றாக அறிவேன் என்றும் அவன்/அவள் 2006..... ஆந் திகதி என் முன்னிலையில் அவனுடைய/அவளுடைய கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத் துகின்றேன்.

.....
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :-----.
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்
முழுப் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

2-825

ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2006 மார்ச மாதம்

1991.05.17 ஆந் திகதியும் 662/11 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக் கோவையின் 7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களையும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களையும் II ஆம் தரத்திற்கு உயர்த்துவதற்கு முன்பு தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை 2006.03.26 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பி வைக்கப்படும்.

2. **தகைமைகள்**.- இதுவரை இப்பரீட்சையைப் பூரணப்படுத்தாத ஆரம்பதரத்தின் வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் மட்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

3. **விண்ணப்பங்கள்**.- இச்சுற்றுநிருபத்தில் இறுதியில் குறிப்பிடப் பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று விண்ணப்ப தாரிகளால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் நிறுவனத் தலைவரின் மூலம் "கொழும்பு 10, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, இலக்கம் 385, 'சுவசிரிபாய கட்டிடம்' பணிப்பாளர் (பரீட்சை)" அவர்களுக்கு 2006.02.28 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட ரூபா 5 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9" x 4" அளவுள்ள கடித உறையொன்றும் அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்.)

4. **பரீட்சைக் கட்டணம்**.- (i) முதன்முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்ப தாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்கப் படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் புரியப்படுதல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படுதலோ புரியப்பட மாட்டாது.

5. பரீட்சைக்கு உட்படுத்திக்கொள்தல்.- (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) தேசிய அடையாள அட்டை ;
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(இ) சாரதி அனுமதிப்பத்திரம் ;
(ஈ) கடவுச்சீட்டு.

6. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை மூன்று எழுத்து மூல வினாப் பத்திரங்களையும் சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சையொன்றையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக்கொள்ளலாம்.

7. **பரீட்சைப் பாடத்திட்டம்** :

7.1 எழுத்துப் பரீட்சை

7.1.1 தாபன விதிக்கோவை - நேரம் 02 மணித்தியாலம். 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100.

பாடவிதானம் -

(i) தாபன விதிக்கோவை -
(அ) I ஆம் பிரிவு II, III, V, VI, VII, VIII, IX, XI, XII, XIII, XV, XXIV, XXV, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII, XXXIII அத்தியாயங்கள்
(ஆ) II ஆம் பிரிவு XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்
(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்கு விதிகள்
(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகள்.

7.1.2 வைத்தியசாலைகள். மருந்துச்சாலைகள் என்பவற்றின் நிர்வாகம் - நேரம் 1 1/2 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100.

பாடவிதானம் - சுகாதாரக் கைந்நூல்
I ஆம் பிரிவு - வைத்திய சேவை
II ஆம் பிரிவு - இரசாயனகூட சேவை

7.1.3 கணக்கியல் - நேரம் : 02 மணித்தியாலம் - 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப்புள்ளிகள் 100.

பாடவிதானம் -

(i) நிதிப்பிரமாணம் - I ஆம் பிரிவு :
I ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
II ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
III ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
IV ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
V ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்
VI ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
VII ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்
(ii) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்.
(iii) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி.
(iv) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்.

7.2 சிங்களம்/தமிழ் வாய்மொழிப்பரீட்சை.- சிங்களம்/தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்களினால் கொழும்பில் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். மொத்தப்புள்ளிகள் 100. தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகளின் பொருட்டு சிங்களத்தில் அல்லது தமிழ் மொழியில் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல்.

8. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் பிரிவில்/விசேட இயக்கத்தில்/நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர் களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk

(வைத்தியர்) எச். ஏ. பி. கஹன்தலியனகே,)
சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம்.

சுகாதார, போஷணை நலனோம்பு அமைச்சு,
"சுவசிரிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2006.02.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான தினைக்களப் பரீட்சை - 2006, மார்ச மாதம்

Departmental Examination for Preliminary Grade Medical Officers & Dental Surgeons - March 2006

அலுவலக உபயோகத்திற்கு

1. (அ) (i) விண்ணப்பதாரரின் பெயர் :-----.
(சிங்களத்தில் அல்லது தமிழில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்)
(ii) விண்ணப்பதாரரின் பெயர் :-----.
(ஆங்கில கெபிட்டல் எழுத்தில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்)
(iii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.
(iv) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) :-----.
(ஆ) (i) அலுவலகப் பெயர் (வைத்திய உத்தியோகத்தர்/பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்) :-----.
(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :-----.
(iii) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.

2. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூண்டினுள் (√) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (x) குறியை இடவும். முதன் முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரி எல்லா விடயங்களுக்கும் தோற்றமளிக்க வேண்டும்.

தாபன விதிக்கோவை :
கணக்கியல் :
சிங்களம் - வாய்மொழி :
வைத்தியசாலைகள் மருந்துச் சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் :
தமிழ் - வாய்மொழி :

3. (அ) தற்பொழுது சேவையாற்றும் இடம் :-----.
(ஆ) அதற்குரிய மாவட்டம் :-----.
(இ) பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சை நிலையம் :-----.
(இந்த நிலையத்துக்கு அளவான விண்ணப்பதாரிகள் இல்லாவிட்டால் அந்த விண்ணப்பதாரிகளை அருகிலுள்ள நிலையத்துக்கு மாற்றம் செய்யப்படும். முன்னால் உள்ள கூண்டினுள் (√) அடையாளத்தை இடவும்.)

கொழும்பு	
களுத்துறை	
குருநாகல்	
கண்டி	
கந்தானை	
காலி	
அனுராதபுரம்	
முல்லேரியா	
பதுளை	
இரத்தினபுரி	
மட்டக்களப்பு	
யாழ்ப்பாணம்	

(இ) பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாவட்டம் :-----.
(ஈ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" x 4" அளவுள்ள ரூபா 5.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறையொன்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
(உ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.
(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) :-----.

4. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) : -----.

5. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா ? : -----.
(ஆ) முதன்முறை அல்லாவிடின், முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா ?

முத்திரைக் கூண்டு

6. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**
எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் -
(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவைகளெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியினால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/ முதன் முறை அல்லாதபடியால் ரூபா ..... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.
(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின்படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும்
இத்தால் உறுதிமொழிகின்றேன்.

.....
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

திருவாளர்/திருமதி/செல்வி ..... என்பவர் வைத்திய உத்தியோகத்தர் ஒருவர்/பல் சத்திரசிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது பிரிவில்/இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறை/அல்லாத படியால் ரூபா ..... பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/முத்திரை ஒட்ட வேண்டியதில்லை எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.....
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்

திருவாளர்/திருமதி/செல்வி ..... என்பவர் வைத்திய உத்தியோகத்தர் ஒருவர்*/பல் சத்திரசிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது பிரிவில்*/இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்கு*/அவளுக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.....
பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட இயக்கத் தலைவரின் கையொப்பம்.
(முத்திரை இடப்படுதல் வேண்டும்)

திகதி :-----.
(* தேவையற்றவற்றைக் கீறிவிடவும்)

2-827

பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

மக்கள் வங்கி - ராகல கிளை

பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான காணித்துண்டு அதன்மீதுள்ள மற்றெல்லாவற்றுடன் சேர்த்து விற்பனை

ஆகக்கூடிய தொகையைக் கூறும் விலைக்கேள்வியாளருக்கு விற்பனை செய்யப்படுவதற்காக இலச்சினையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவினுள், யட்டிபலாத்த கோறளையில், ஹரஸ்பெத்த கிராம அலுவலர் பிரிவில், ஹரஸ்பெத்தவில் "நாவெல" என்றழைக்கப்படும் காணியிலிருந்து நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்டு மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்டதும், 1976.01.01 ஆம் தேதிய 250 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் இல. 500 என அடையாளமிடப்பட்டதும், பரப்பளவில் ஒரு ஏக்கர் ஒரு றூட் நான்கு பேர்ச்சஸ் (1ஏ. 1றூ. 4பே.) கொண்டுள்ளதும், அதன்மீதுள்ள மற்றெல்லாவற்றுடனும் சேர்த்து பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமானது மான அக்காணிதுண்டு அடங்கலும்.

2006 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர், நுவரெலியா, பார்க் வீதி, இல. 40இலுள்ள நுவரெலியா மக்கள் வங்கியின் பிரதேச தலைமையலுவகத்தில் இடப்பட்ட விசேட கேள்விப்பத்திரப் பெட்டியில் வைப்பிலிடுவதன்மூலம் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2006 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு நுவரெலியா மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளரினால் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரக்காரர் அல்லது அவரது பிரதிநிதி அத்தகைய சந்தர்ப்பத்தில் சமுகமளிக்க முடியும்.

விசேட நிபந்தனைகள் :

(1) மக்கள் வங்கியின் நுவரெலியாக் கிளையில் 5,000 ரூபாவான திருப்பிக்கொடுபடற்பாலதான வைப் பொன்றையும், 500 ரூபாவான திருப்பிக் கொடுபடற் பாலதல்லாத வைப் பொன்றையும் வைப்பிலிடுவதன்மேல், நுவரெலியா, மக்கள் வங்கி, பிராந்தியத் தலைமை யலுவலகத்திலிருந்து கேள்விப்பத்திரப்படிவங்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஆகக்கூடிய தொகையைக்கூறும் விலைக் கேள்வியாளருக்கு ஆதனத்தை உரிமை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், கேள்விப்பத்திரத்தின் மீதான தொகையும் உரிமைமாற்றச் செலவும், கேள்விப்பத்திரங் களைத் திறக்கும் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) விதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் பணத்தை வைப்பிலிடு வதற்குத் தவறும் பட்சத்தில், கேள்விப் பத்திரக்காரரின் கேள்விப்பத்திரம் இல்லாதாக்கப் பட்டதாகும்.

(4) ஏதேனும் கேள்விப்பத்திரத்தை ஏற்றக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு மக்கள் வங்கிக்குள்ள உரிமையை ஏற்றங்கீகரிப்பதற்குக் கேள்விப்பத்திரக்காரர்கள் உடன் படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்காகப் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும் :-

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமை அலுவலகம்,
இல. 40, பார்க் வீதி, நுவரெலியா,
தொலைபேசி இல.: 052-2222555
052-2222557

2-761

மக்கள் வங்கி - நிலந்தஹின்ன கிளை

தெனம்புரவில் காணித்துண்டு அதன்மீதுள்ள மற்றெல்லாவற்றுடனும் சேர்த்து விற்பனை

ஆகக்கூடிய தொகையைக் கூறும் விலைக்கேள்வியாளருக்கு விற்பனை செய்யப்படுவதற்காக இலச்சினையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை யட்டிபலாத்த கோறளையில், வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவினுள், தெனம்புரவில் அமைந்துள்ள வலஸ்கெலஹேன என்றழைக்கப்படும் காணியிலிருந்து உரிமம்பெற்ற நிலஅளவை யாளரான திரு. ஆர். பீ. அத்தநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 6483 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டம் 1 என அடையாள மிடப்பட்ட பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட அக்காணித்துண்டு அடங் கலும். பரப்பளவில் அதன் அதன்மீதுள்ள மற்றெல்லாவற்றுடனும் சேர்த்து ஒரு ஏக்கர் முப்பத்தி நான்கு பேர்ச்சுக்களை (1ஏ. 0றூ. 34பே.) கொண்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர், நுவரெலியா, பார்க் வீதி, இல. 40 இலுள்ள நுவரெலியா மக்கள் வங்கியின் பிராந்தியத் தலைமையலுவகத்தில் இடப்பட்ட விசேட கேள்விப்பத்திரப் பெட்டியில் வைப்பிலிடுவதன்மூலம் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். 2006 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10 ஆம் திகதி பி. ப. 3.00 மணிக்கு நுவரெலியா மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளரினால் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரக்காரர்கள் அல்லது அவரது/அவளது பிரதிநிதி கேள்விப்பத்திரங்களைத் திறக்கும் நேரத்தில் சமுகமளிக்க முடியும்.

விசேட நிபந்தனைகள் :

(1) மக்கள் வங்கியின் நுவரெலியாக் கிளையில் 5,000 ரூபாவான திருப்பிக்கொடுபடற்பாலதான வைப்பொன்றையும், 500 ரூபாவான திருப்பிக்கொடுபடற்பாலதல்லாத வைப்பொன் றையும் வைப்பிலிடுவதன்மேல், நுவரெலியா, மக்கள் வங்கி, பிரதேசத் தலைமையலுவலகத்திலிருந்து கேள்விப் பத்திரப்படிவங்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஆகக்கூடிய தொகையைக்கூறும் விலைக் கேள்வியாளருக்கு ஆதனத்தை உரிமை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், கேள்விப்பத்திரத்தின் மீதான தொகையும் உரிமைமாற்றச் செலவும், கேள்விப் பத்திரங்களைத் திறக்கும் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் அவரினாற் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் பணத்தை வைப்பிலிடுவதற்கு அவர் தவறும் பட்சத்தில், கேள்விப்பத் திரக்காரரின் கேள்விப்பத்திரம் இல்லாதாக்கப்பட்டதாகும்.

(4) ஏதேனும் கேள்விப்பத்திரத்தை ஏற்றக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு மக்கள் வங்கிக்குள்ள உரிமையை ஏற்றங்கீகரிப்பதற்குக் கேள்விப்பத்திரக்காரர்கள் உடன் படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்காகப் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும் :

பிரதேச முகாமையாளர்,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 40, பார்க் வீதி, நுவரெலியா,
தொலைபேசி இல.: 052-2222555
052-2222557

2-764

உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

